



## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) நாமக்கல் மாவட்டம்

### பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம்

### தட்டாங்குட்டை ஊராட்சி

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், தட்டாங்குட்டை ஊராட்சி, குமாரபாளையம் அமானி கிராமம், சர்வே எண்: 342/2A5-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

அளவு : 1:400

இணையதள விண்ணப்பம் எண்: **2WDZ3SES (18863 - 2023 - NKL)**

**I.குறிப்பு:**

வ

(i) மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 0.3875 ஏக்கர் (அ) 1570.00 சதுர.மீ

(ii) விஸ்திரிப்பு சாலை மற்றும் மூலை மடக்குகளின் பரப்பு : 260.925 சதுர.மீ

(iii) மனைப்பிரிவு எல்லை : ........................................

(iv) விஸ்திரிப்பு சாலை : ........................................

(v) நிலையிலுள்ள சாலை : ........................................

(vi) கோரிய மனைகள் : 08

(vii) ஒதுக்கிய மனைகள் : 08

(viii) பொது ஒதுக்கீடு:

(விஸ்திரிப்பு சாலை பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது)

(ix) ஒதுக்கப்பட வேண்டிய பூங்காவிற்பான பரப்பு = (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - சாலைகளின் மொத்தப்பரப்பு) x (10/100)

= (1570.00 - 260.925) x (10/100)

= 130.90 சதுர.மீ

அரசாணை எண் 18-ன், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கள் துறை நாள் 4.2.2019-ன் படி 10% பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகையினை மனுதாரரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**II.பொது ஒதுக்கீடுகள்:**

உள்ளாட்சிக்கு மனுதாரரால் தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விஸ்திரிப்பு சாலை மற்றும் மூலை மடக்குகளின் பரப்பு : 260.925 சதுர.மீ

TNCD & BR 2019,47(8)-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒப்படைக்கப்பட வேண்டிய மின்பகிர்மானம் மனையின் பரப்பு (HAND OVER TO BE TANGEDCO) : 9.00 சதுர.மீ (0.68%)

ஒப்படைக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு மனையின் பரப்பு (HAND OVER TO BE LOCAL BODY) : 9.00 சதுர.மீ (0.68%)

**விஸ்திரிப்பு சாலையின் பரப்பளவு பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| 1. 2.0மீ அகல சாலை | 1-1 | = | 259.80 சதுர.மீ |
| 2. 1.5மீx 1.5மீ மூலை மடக்கு 01 எண்ணம் | | = | 1.125 சதுர.மீ |
| | மொத்தப்பரப்பளவு | = | 260.925 சதுர.மீ |

**மூலை மடக்கு:** 12.0மீ சாலை வரை 1.5மீx 1.5மீ

**III.நிபந்தனைகள்:**

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்து கொள்ளவேண்டும்.
2. அரசானை எண். 18-ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கள் துறை நாள்: 04.02.2019-ன் படி அரசு வழிகாட்டி மதிப்பின்படி தொகையை செலுத்தப்பட வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநா/ ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் - குத்தகை பத்திரம் - பட்டா - தானபத்திரம் - பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது என அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.
8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே HT LINE , LT LINE மற்றும் TELEPHONE LINE செல்லுமாயின் அதனை சாலையின் போக்கிற்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
11. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

**APPROVAL NO : SWP/ DTCP/ NAMAKKAL / LAYOUT NO: 426/2023**

தே.புவனேஸ்வரி
அளவர் / உதவி வரைவாளர்

*Signature Not Verified*
*Signed by: Assistant Director*
*Location:Namakkal*
*Date:2023.12.27 12:37:01*

ச.சுரேந்திரன்
வரைவாளர் நிலை -III

பொ.யமுனாதேவி
மேற்பார்வையாளர்

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம்.